துணை முதலமைச்சர் – கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கலைஞர் அரங்கில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றி, 150 கிரிக்கெட் அணிகளுக்கு ரூபாய். 15,67,000 மதிப்புள்ள கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்களையும் மற்றும் கிரைண்டர், தையல் இயந்திரம், அயன் பாக்ஸ், குளிர்சாதன பெட்டி, சைக்கிள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான திருமதி.பெ. கீதாஜீவன் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட C.M.மதியழகன், ஆனந்த் சேகரன், ஆறுமுகம், பிரதீப், ராதாகிருஷ்ணன், மகேந்திரன், பாரதி ரவிக்குமார், டி.கே.எஸ்.ரமேஷ், ஜெயக்குமார், ராமசுப்பு, சின்ன மாரிமுத்து, கஸ்தூரி தங்கம், வேலுச்சாமி, அந்தோணி ஸ்டாலின், கவிதா தேவி, அபிராமிநாதன், அருண்சுந்தர், செல்வின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## ஃபெஞ்சல் புயல்: செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார்!

## நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு ஆறுதல் கூறி – நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!

சென்னை,டிச.3-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழையால் பாதிக்கப்பட்ட செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பாதிப்புகளை நேற்று முன்தினம் (1.12.2024) நேரில் பார்வையிட்டு, நிவாரண முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:

முதலாவதாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் முத்தமிழ் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 65 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 120 பொதுமக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய், போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் 108 கொடப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கானத்தூர் கொடப்பட்டினம் கிராமத்தை சேர்ந்த இருளர் இன மக்களுக்கு அரிசி, பிஸ்கட், பாய் போர்வை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக மரக்காணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்பினை வழங்கினார்.

மேலும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி வார்டு எண் 26, நாகலாபுரம் பகுதியில் ஃபெஞ்சல் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இந்த பகுதியில் சீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சேவியர் காலனி பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட சேவியர் காலனி பகுதியைச் சேர்ந்த 500 பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

மேலும் விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் கோட்டகுப்பம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள ஜாமி ஆ மஸ்ஜித் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 250 பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

### பேட்டி!

விழுப்புரம் பேருந்து நிலைய ஆய்வின்போது செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:

மழை தொடர்ந்து பெய்து வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நானும் அமைச்சர் பெருமக்களும் வந்துள்ளோம். இந்த பேருந்து நிலைய பகுதியில் 60 செ.மீட்டருக்கும் அதிகமான மழை பெய்து வருகின்றது. இன்னும் மழை நிற்க வில்லை. இருந்தபோதும் பம்புகள் மூலமாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. கூடுதலாக பம்புகள் அமைத்து நீரை வெளியேற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிரந்தர தீர்வாக பேருந்து நிலயைத்தின் தரையின் உயரத்தை அதிகரிக்க முன்மொழிவு கொடுத்துள்ளார்கள். இதனைத்தொடர்ந்து கடலூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் ஆய்வு செய்ய செல்லவுள்ளோம்.

**கேள்வி:** நேற்று பெய்த மழையில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதே....

**பதில்:** மழை நின்றபிறகு 3 நாட்களுக்கு பிறகு களஆய்வு செய்து இழப்பீடு கண்டிப்பாக கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சி புருஷோத்தமன் நகரில் ஃபெஞ்சல் புயல் மழை பாதிப்பு குறித்தும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் கடலூர் மாவட்டம் கடலூர் நகராட்சி சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு நிவாரணப்பொருட்கள் அடங்கிய தொகுப்பினையும், இரவு உணவினையும் வழங்கினார்.

இந்த ஆய்வுகளின் போது, வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கா. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, சபா.இராஜேந்திரன், எஸ்.எஸ்.பாலாஜி, மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர்கள் ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், விழுப்புரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அரசு முதன்மைச் செயலாளர்/ போக்குவரத்துத்துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர் ராமன் செங்கல்பட்டு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆ.ரா. ராகுல் நாத் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, (விழுப்புரம்), சிபி ஆதித்யா செந்தில்குமார் (கடலூர்), ச.அருண்ராஜ் (செங்கல்பட்டு) உள்பட அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் சங்கரன்கோவில் கலைஞர் திடல் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு பிறந்தநாள் விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டம் ஆகிய முப்பெரும் விழா நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. உடன் தங்கவேலு, பரமகுரு, ராணி ஸ்ரீகுமார் எம்.பி.மாநில இளைஞரணி துணை செயலாளர் ராஜா, தொகுதி பார்வையாளர் ராமஜெயம், முத்துச்செல்வி, செண்பக விநாயகம், மோகனநிதி, பிரகாஷ் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகராட்சி தச்சை மண்டலம் 12 வது வார்டு சிந்து பூந்துறை தாமிரபரணி ஆற்றின் ஓரம் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், வட்ட செயலாளர் மாரிமுத்து, தச்சை பகுதி துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் கோகுலவாணி சுரேஷ் ஆகியோர் ஏற்பாட்டில் 48 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் பங்கேற்று மேயர்.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகளை நாட்டினார். நிகழ்வில் வழக்கறிஞர் கந்தசாமி, ரேவதி பிரபு, டாக்டர்.சங்கர், மன்சூர், மேகை செல்வம், ராஜா, கிருஷ்ணவேணி, சுபஹானி, பினிக்ஸ் அந்தோணி, சுந்தரவேலன், சங்கர், தங்கராஜ், நயினார் கண்ணன், காசிமணி, கானார்பட்டி சாமுவேல், சேக் பிள்ளை உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் மற்றும் துணை அமைப்பாளர்கள்சார்பாக கழக மாநில இளைஞரணி செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டுஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன்ஆண்டிபட்டி அருகே உள்ள மனிதநேய காப்பகத்தில் முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கல்யாணி, மேற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர் காராமணி, தெற்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் பாலசுப்ரமணியம், இளைஞரணி சிவா, கிளை கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மாற்றுத்திறனாளிகள் சார்பில் நன்றி!

## மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை !

சென்னை, டிச.3 –

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளி நல வாரிய உறுப்பினருமான ரெ.தங்கம் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தை யொட்டி வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

குறித்து அவரது அறிக்கை வருமாறு;

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஊனம் என்ற சொல்லை நீக்கி மாற்றுத்திறனாளிகள் என பெயர் சூட்டியும், அவர்களுக்கான தனித்துறையைக் கண்டு, தனி நல வாரியம் அமைத்தும், அத்துறையை தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வாரி வழங்கி மாற்றுத்திறனாளிகளின் இதயங்களில் இன்றும் நீங்கா அகல் விளக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை லட்சக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் இன்றும் கலைஞர் அவர்களை நன்றி உணர்வுடன் வணங்கி போற்றுகிறோம்.

அவரது வழியில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் எங்கள் துறை அமைச்சரும், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டு காலத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மலர பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களான, ஒருகால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி களுக்கு விலையில்லா இணைப்புச் சக்கர ஸ்கூட்டி, தன்னார்வத் தொண்டும் மூலம் நடத்தப்படும் சிறப்பு பள்ளிகளில் தங்கிப் பயிலும் மனவளர்ச்சி குன்றியோ ருக்கான மதிய உணவு திட்டம், கடும் மாற்றத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் பராமரிப்பு உதவித்தொகை ரூ.2000/ மற்றும் ரூ. 1500/ உயர்த்தி வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தில் சமூக நல பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விபத்து இறப்பு தொகை ரூ. 1 லட்சத்திலிருந்து 2 லட்சமாக உயர்த்தி வழங்குதல், கல்வி உதவித் தொகை இரண்டு மடங்கு உயர்த்தி வழங்குதல்,

சிறப்பு பள்ளியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவுக்கான தொகை ரூ. 1200/ இருந்து ரூ.1400/ உயர்த்தி வழங்குதல், அரசுத் துறையில் பணியாற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பதவி உயர்வு பெற டி.என்.பி.எஸ்.சி. நடத்தும் துறைத்தேர்விருந்து விலக்கு மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு உட்பட்ட சாலைகளில் மாற்றுத்திறனாளிகள் கடை வைத்து வாழ்வாதாரத்தை காக்க அரசாணை வெளியிட்டது,

மாற்றுத்திறனாளிகளின் நீண்ட நாள் கனவான, சென்னை மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரைகளில் மாற்றுத்திறனாளிகள் கடல் நீரில் தங்களின் பாதத்தை பதித்து மகிழ்வூட்ட சிறப்பு பாதை அமைத்தல் போன்ற வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களையும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினத்தில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வணங்கி மகிழ்கிறோம்.

மேலும், உலகெங்கும் வாழும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கான உரிமைகளை பாதுகாத்து பல்லாண்டு வாழ வாழ்த்துகி றோம்.

இவ்வாறு ரெ.தங்கம் தெரிவித்துள்ளார்.

# நான் உள்ள வந்தா என்னப்பா?

## ‘கணையாழி’ தலையங்கம்!




உள்ளே வந்தா என்னப்பா என்று
உறுமிக் கொண்டு வந்த
காற்றழுத்தத் தாழ்வு மண்டலப் புயல்
கரையைக் கடந்திருக்கிறது.

கனமழையைத் தாங்காமல்
காம்பொடிந்து கிடக்கின்றன
அடைமழையில் குடை விரிக்கும்
காளான்கள்!

சேதாரம் அதிகம் இல்லாமல்
மக்களைக் காப்பாற்றியிருக்கிறது
முதலமைச்சரின் நிருவாகம்!

ஆனால் கரையில்
மன அழுத்தத் தாழ்வு மண்டலத்தை
உருவாக்கி இருக்கிறது
இசைவாணியின்
உள்ள வந்தால் என்னப்பா!

வைக்கம் நுழைவுப் போராட்டம் நடத்தி
வெற்றி கண்ட மாநிலத்தில்
எந்தச் சாதியாக இருந்தாலும்
உள்ளே வரக் கூடாது என்று
பெண்களுக்குத் தடை!

சபரிமலைக்குப் போகப்
பெண்களுக்குத் தடை இல்லை என்று
உச்ச நீதிமன்றமே 2018 இல்
அனுமதி தந்திருந்த போதும்
இப்போதும்
ஐயப்பனின் பக்தர்கள்
அனுமதிக்க மறுக்கிறார்கள்!

அரசமைப்புச் சட்ட நாளில்
சபரிமலைக்குப் போக வந்த
துருபதி தேசாய்
போராட்டக்காரர்களால்
விமான நிலையத்திலேயே
தடுத்து நிறுத்தப்பட்டார்!
பிறகு வந்த 10 பெண்கள்
திருப்பி அனுப்பப்பட்டனர்!

அதையும் மீறி உள்ளே சென்ற
பிந்து அம்மினி, கனக துர்கா
தாக்கப்பட்டனர்!
பிந்து அம்மினிக்கு
மிளகாய்ப்பொடி இரசாயன அபிஷேகம்!
ஆட்டோவில் வந்து தாக்கியதில்
அவருக்குப் பல் உடைந்தது.
இவ்வளவுக்கும் அவர்
சட்டக் கல்லூரி விரிவுரையாளர்
ஆனாலும் என்ன
அவர் ஒரு தலித் இல்லையா?

மாநிலம் முழுதும் போராட்டம்
இரண்டு பேர் உயிர் போனது!

கனக துர்காவையும்
விட்டுவைக்கவில்லை.
பத்துநாள் போலிஸ் பாதுகாப்பு!
பாதுகாப்பு முடிந்து
நான்
உள்ள வந்தா என்னப்பா என்று
வீட்டுக்குப் போனால்
மாமியாரால் தாக்கப்பட்டார்!
காயத்தோடு மருத்துவமனைக்குப்
போனவர்
திரும்பி வந்தால்
உள்ளே வராதே என்று
சபரிமலையாய்க் கணவனின் அதிகாரம்!

நீதிமன்றம் சென்று தீர்ப்பு வாங்கி
வீட்டுக்குத் திரும்பினால்
வீட்டைக் காலி செய்துவிட்டு
கணவனும் மாமியாரும்
கனக துர்காவின் இரட்டைக்
குழந்தைகளுடன்
தலைமறைவாகி இருந்தனர்.
இவ்வளவுக்கும் கனக துர்கா
அரசுத்துறை பணியில் இருக்கிறார் !

நான்
உள்ள வந்தா என்னப்பா என்று
ஆறு வருடங்களுக்கும் முன்
இசைவாணி எழுப்பிய கேள்விக்கு
இப்போதும் பதில் சொல்ல முடியாமல்
பாட்டையும்
பாடியவரையும் பழிதீர்க்க நிற்கிறார்கள்!

இவ்வளவுக்கும்
ஐயப்பன் வேறு யாருமில்லை
பாதி உடம்பைப்
பார்வதிக்குத் தந்து
மாதொரு பாகராக இருக்கிற
பரமசிவனின் மகன்!
பரமசிவனின் பாதியாக இருக்கிற
பார்வதிதேவியின் வளர்ப்பு மகன்!

கங்கை எனும் பெண்ணைத்
தலையில் வைத்துக் கொண்டாடும்
பரமசிவனின் மகனை வணங்கப்
பெண்களுக்கு உரிமை இல்லையா?
நான் உள்ள வந்தா என்னப்பா என்று
பாட்டில் கேள்வி கேட்டிருக்கிறார்
இசைவாணி!

இந்தக் கேள்விக்கு
இடமில்லை தமிழகத்தில்
ஏனெனில்
கோயிலுக்குள் வர மட்டுமில்லை
ஓதுவாராகவும் அர்ச்சகராகவும்
பெண்களுக்கு
உரிமை அளித்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!
ஆம்!
அனைத்து சாதியினரும்
அர்ச்சகராக ஓராண்டுப்பயிற்சி!


சென்னை, மதுரை
திருவரங்கம், திருவண்ணாமலை
திருச்செந்தூர், பழனி என்று
ஆறு இடங்களில் பயிற்சி மையம்!
ஆண்கள் மட்டுமின்றிப் பெண்களுக்கும்
ஆன்மீகத்தில் பயிற்சி!

பயிற்சி பெற்ற பெண்களுக்கு
முன்னுரிமை அடிப்படையில்
பணிநியமனம் வழங்கி
முன் மாதிரியை உருவாக்கி இருக்கிறார்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

விமானம் ஓட்ட
விண்வெளிக்குச் செல்ல
ஆண்களைப் போலப் பெண்கள்
அணிவகுத்து நிற்கிறார்கள்.
ஆனால்
அவர்களைப் போல முடியுமா
ஆண்களால் உயிர் சுமக்க!

அதனால்தான்
முதல்வர் ஆணையிட்டிருக்கிறார்
“கருவைச் சுமக்கும் பெண்கள்
இனி
கருவறைக்குள்!”
ஆகவே
இந்தியா முழுதும் செல்லட்டும்
அந்தத் தமிழ் முழக்கம்
**“நான்
உள்ள வந்தால் என்னப்பா?”**

- நன்றி
**கணையாழி!**
டிசம்பர் - 2024



**ம.ரா.**